விஜயபாரதம்
மின்னணு தின இதழ் (தனிச்சுற்று) VIJAYABHARATHAM DAILY
பிலவ, ஆடி - 10 திங்கள் 26.07.2021 மலர் - 2, இதழ் - 111

# சரணடைந்த போராளிகள்



விஜயபாரதம்

அசாமில் மூர்க்கமாக செயல்பட்டு வந்த தேசிய விடுதலை முன்னணியின் (என்.எல்.எஃப்.பி) என்ற போடோ பயங்கரவாதிகளின் தலைவன் பினோத் முசஹாரி தலைமையில் 22 பயங்கரவாதிகள் அசாமின் உதல்குரி மாவட்டத்தில் தங்களுடைய ஆயுதங்களுடன் அரசிடம் சரணடைந்தனர். முன்னதாக கடந்த 2019ல் அவர்கள் சரணடைவதாக அரசிடம் ஒப்பந்தம் போட்டனர் என்றாலும் அதனை செயல்படுத்தவில்லை.

இதனையடுத்து அரசு மேற்கொண்ட சில அதிரடி நடவடிக்கைகள் காரணமாகவும் முதல்வர் டாக்டர் ஹிமந்தா பிஸ்வா சர்மாவின் அழைப்பை ஏற்றும் அவர்கள் தற்போது சரணடைந்து தேசிய நீரோட்டத்தில் இணைந்தனர். இது, அசாமில் நிரந்தர அமைதியை உருவாக்கும் முயற்சியில் ஒரு மைல்கல்லாகக் கருதப்படுகிறது.

முன்னதாக, என்.டி.எப்.பி, அனைத்து போடோ மாணவர் சங்கத்தின் நான்கு பிரிவுகளுடன் அமைதி ஒப்பந்தத்தில் மத்திய அரசு கையெழுத்திட்ட பின்னர், கடந்த 2020 ஜனவரியில் 1,615 பயங்கரவாதிகள் ஆயுதங்களை கீழே போட்டு சரணடைந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. இக்குழுக்களை சேர்ந்த சரணடையாத மீதமுள்ள 37 பயங்கரவாதிகளும் விரைவில் சரணடைவார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது.

---

# கூட்டுறவு சங்க மோசடி



விஜயபாரதம்

கேரளாவில் பரபரப்பான கருவண்ணூர் கூட்டுறவு வங்கி மோசடி வழக்கில், ஆளும் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலக் குழு உறுப்பினரும் முன்னாள் அமைச்சருமான ஏ சி மொய்தீனின் உறவினர் ஈடுபட்டுள்ளார் என்று தகவல்கள் வெளியாகியுள்ளன. கரீமின் மகன் பிஜு, வங்கியின் மேலாளராக 15 ஆண்டுகளுக்கும் மேலாக பணியாற்றி வருகிறார். மோசடியாக்க் கொடுக்கப்பட்ட கடன்கள் அவருக்கு சொந்தமான தெக்கடி ரிசார்ட்ஸ் என்ற ஒரு நிறுவனத்தின் பெயரில் எடுக்கப்பட்டுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன. மேலும் அந்த வங்கியின் உறுப்பினர்களாக உள்ள வேறு சில சி.பி.எம் தலைவர்களும் இந்த வங்கியை பயன்படுத்தி பல கோடிகளுக்கு பினாமி பரிவர்த்தனைகள் செய்ததாகக் குற்றச்சாட்டும் உள்ளது. கட்சியின் உயர்மட்ட தலைவர்கள் அவர்களைப் பாதுகாக்க முயற்சிக்கின்றனர். சுமார் 300 கோடி அளவிற்கு ஊழல் நடைபெற்றதாக கணக்கிடப்படும் இந்த ஊழல் குறித்து அமலாக்கத்துறை அறிக்கை கேட்டுள்ளது.

# அடுத்தடுத்த சர்ச்சையில் வனத்துறை அமைச்சர்





விஜயபாரதம்

கேரள காங்கிரஸ் பிரமுகரின் மகளை பாலியல் துன்புறுத்தல் செய்த சக காங்கிரஸ் தலைவர் பத்மாகரனை, அவ்வழக்கில் இருந்து விடுவிக்க தொடர்ந்து பாடுபட்டு வருகிறார் கம்யூனிஸ்ட் கட்சியை சேர்ந்த கேரள வனத்துறை அமைச்சர் ஏ.கே.சசீந்திரன். இது கேரளா முழுவதும் பலத்த சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது. இந்நிலையில், சுசீந்திரன் சமீபத்தில் அந்த பெண்ணின் தந்தையிடம் அந்த வழக்கை சுமூகமாக பேசி தீர்க்க வற்புறுத்தியுள்ளார். அந்த ஆடியோ தற்போது வெளியாகி மீண்டும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. சுசீந்திரனை பதிவியில் இருந்து நீக்க பா.ஜ.க உள்ளிட்ட கட்சிகள், பல்வேறு அமைப்புகள் தொடர்ந்து குரல் கொடுத்து வருகின்றன. ஆனால், ஆளும் கம்யூனிச கட்சி அவருக்கு சாதகமாகவே செயல்படுகிறது. முன்னதாக கடந்த 2017ல் ஒரு பெண்ணிடம் தகாத முறையில் சுசீந்திரன் பேசியது பெரிய சர்ச்சையாகியது. இதனையடுத்து அவர் பதவி விலகினார். ஆனால், அவரை கட்சி மீண்டும் இணைத்துக் கொண்டது என்பது நினைவு கூரத்தக்கது.

---

# சமூக ஊடக மசோதா அறிமுகம்

சமூக ஊடக நிறுவனங்களான முகநூல், டுட்விட்டர், இன்ஸ்டாகிராம் உள்ளிட்ட சமூக ஊடகங்கள், தொழில்நுட்ப நிறுவனங்கள் அனைத்தும் தாங்கள் இடைநிலையாளர்கள் என கூறித் தங்கள் பொறுப்புகளில் இருந்து தப்பித்து வருகின்றன. அதனைத் தடுக்க வேண்டும் என உலகம் முழுவதிலும் குரல்கள் எழுகின்றன. பாரத அரசுகூட சமீபத்தில் இதற்காக புதிய சட்டம் இயற்றியது. இந்நிலையில், அமெரிக்க செனட்டர் ஆமி குளோபுச்சார், சமீபத்தில் இதனை தடுக்கும் விதமாகவும் சமூக ஊடகங்கள் தங்கள் பயனர்கள் பதிவுகளுக்கு பொறுப்பேற்கும் விதமாகவும் ஒரு சட்ட மசோதாவை அறிமுகப்படுத்தினார். அப்போது அவர், ‘சமூக ஊடக நிறுவனங்கள் உலகின் எல்லா நாடுகளிலும் உள்ள வழக்குகளுக்கு எதிராக பாதுகாப்பை அனுபவிக்கின்றன. ஆனால்அவற்றின் பொறுப்பை சரிசெய்ய வேண்டிய தேவை அதிகரித்து வருகிறது. அதனால், இந்த மசோதாவை அறிமுகப்படுத்தி அவர்கள் அனுபவித்து வரும் அபரிமிதமான சுதந்திரத்துக்கு கடிவாளமிடுவது அவசியம்’ என கருத்து தெரிவித்துள்ளார்.




விஜயபாரதம்

# பயங்கரவாதி மிரட்டல்



விஜயபாரதம்

மமதா ஆட்சியின் கீழ் மேற்கு வங்கம் முஸ்லிம் பயங்கரவாதிகளின் புகலிடமாக மாறிவருகிறது. குடிசைத் தொழிலைபோல வெடிகுண்டுகள் தயாரிக்கப்படுகின்றன. அண்மையில் கொல்கத்தாவில் நியோ ஜமாஅத் உல் முஜாஹிதீன் பங்களாதேஷ் (ஜே.எம்.பி) அமைப்பை சேர்ந்த மூன்று பயங்கரவாதிகள் கைது செய்யப்பட்டனர். அவ்வகையில், சமீபத்தில் வடக்கு தினாஜ்பூர் பிரஸ் கிளப் அலுவலகம் முன்பாக ஒரு சி.டி கண்டெடுக்கப்பட்டது. அதில், 'இந்த செய்தி அனைத்து சேனல்களிலும் காட்டப்பட வேண்டும், இல்லையெனில் அவர்கள் மோசமான விளைவுகளை சந்திப்பார்கள்' என கூறிய ஒரு முகமூடி அணிந்த நபர், தன்னை ஹிஸ்புல் முஜாஹிதீன் பயங்கரவாத அமைப்பைச் சேர்ந்த தௌசிப் அலி என அடையாளப்படுத்திக் கொண்டான். மேலும், 'மேல்நிலைப் பள்ளி ஆசிரியர்களை தேர்வு செய்யும் மாநில வேலைவாய்ப்பு தேர்வில் தனது உறவினர்களில் 7 பேர் நிராகரிக்கப்பட்டுள்ளனர். அவர்களுக்கு எதாவது ஆனால், இத்தேர்வில் தேர்ச்சி பெற்ற 13,000 பேரையும் கொல்வோம், தேர்வை நடத்திய அதிகாரிகளையும் கொல்வோம். மமதா பேனர்ஜி தன் தவறை திருத்திக்கொள்ள வேண்டும்.' என மிரட்டியுள்ளான். காவல்துறையினர் இதுகுறித்து விசாரிக்கின்றனர்.

# கடற்கரை கண்காணிப்பு



விஜயபாரதம்

பாரதத்தின் கடலோரப் பகுதி சுமார் 7,516 கி.மீ நீளமுடையது. இதனை கண்காணிக்க கப்பல்கள் மட்டும் போதாது. எனவே, கடற்கரையோர கண்காணிப்பு திறனை மேம்படுத்துவது அவசியம். அதன் பொருட்டு ராணுவ ஆராய்ச்சி மேம்பாட்டு அமைப்பான டி.ஆர்.டி.ஓவின் டேராடூன் பிரிவு, புதிய எலக்ட்ரோ ஆப்டிகல் வகை கடலோர மற்றும் துறைமுகம் சார்ந்த கண்காணிப்பு அமைப்பை மேம்படுத்த உள்ளது. டேராடூனில் உள்ள இன்ஸ்ட்ருமெண்ட்ஸ் ரிசர்ச்& டெவலப்மெண்ட் எஸ்டாப்ளைஷ்மெண்ட் என்ற நிறுவனம் இந்த அமைப்பை மேம்படுத்தும். இந்த அமைப்பில் தெர்மல் இமேஜர்கள், உயர்தர ஆப்டிகல் காமிராக்கள் பொருத்தப்படும். இதன் உதவியுடன் இலக்கை துல்லியமாகக் கண்டறிந்து கண்காணிக்க முடியும். மேலும், அனைத்து கால நிலைகளுக்கும் ஏற்ற வகையிலும், இரவு பகலிலும் செயல்படக்கூடிய இந்த அமைப்பு கடற்கரையோரமாக உள்ள முக்கிய இடங்களில் நிறுவப்படும். இந்த அமைப்புகளை கடலோர காவல் படை நிர்வகிக்கும். 25 கி.மீ. தூரத்திற்கு இந்த அமைப்பால் கண்காணிக்க முடியும். மேலும் 5மீ அளவுள்ள சிறிய படகை கூட கண்டறியவல்லது. மேலும் இதனால் ஒரே நேரத்தில் பல இலக்குகளை கண்காணிக்க முடியும்.

# கமலாச்சேரி பேருந்து எரிப்பு வழக்கு




விஜயபாரதம்

சேலத்தில் இருந்து கேரள மாநிலம் எர்ணாகுளம்வரை இயக்கப்பட்ட தமிழக அரசு பேருந்தை கடந்த 2005ல் கடத்தினான் கேரளாவை சேர்ந்த கே.ஏ. அனமூப் என்ற பயங்கரவாதி. மேலும் கோயம்புத்தூர் சிறையில் காவலில் வைக்கப்பட்டிருந்த பி.டி.பி தலைவர் அப்துல் நாசர் மதானியை விடுவிக்கவும் கோரிக்கை வைத்தான். பிறகு அந்த பேருந்தை தீ வைத்து எரித்தான். கமலாச்சேரி பேருந்து எரிப்பு வழக்கு என அழைக்கப்பட்ட இவ்வழக்கு விசாரணை தேசியப் புலனாய்வு முகமையான என்.ஐ.ஏ வசம் ஒப்படைக்கப்பட்டது. இதனை விசாரித்த என்.ஐ.ஏ, இவ்வழக்கில் அனுமூப் உள்ளிட்ட 13 பேர் மீது குற்றப்பத்திரிகை தாக்கல் செய்தது. இவ்வழக்கை விசாரித்த என்.ஐ.ஏ சிறப்பு நீதிமன்றம், அனுமூப்பிற்கு 6 ஆண்டுகள் கடுங்காவல்; சிறைத் தண்டனை மற்றும் ரூ. 1,60,000 அபராதம் விதித்து தீர்ப்பளித்து உள்ளது.

# முத்ரா கடன் தமிழகம் முதலிடம்




விஜயபாரதம்

சிறு, குறு மற்றும் நடுத்தர நிறுவனங்கள் மற்றும் கார்பரேட் அல்லாத, வேளாண் தொழில் சாராத நிறுவனங்களுக்கு 10 லட்சம் ரூபாய் வரை கடன் தொகை வழங்குவதற்காக பிரதமர் மோடியால் 2015ல் அறிமுகப்படுத்தப்பட்டது 'முத்ரா யோஜனா' திட்டம் . இத்திட்டத்தின் கீழ், தொழில் மேம்பாட்டுக்காக வங்கிகள் வாயிலாக மூன்று பிரிவுகளில் கடனுதவி வழங்கப்படுகிறது. அதன்படி, சிஷு திட்டத்தில் ரூ. 50,000 வரையிலும், கிஷோர் திட்டத்தில் ரூ. 50,000 முதல் ரூ. 5 லட்சம் வரையிலும், தருண் திட்டத்தில் ரூ. 5 லட்சம் முதல் ரூ. 10 லட்சம் வரையிலும் கடனுதவி வழங்கப்படுகிறது. இதுவரை நாடு முழுவதும் 30 கோடிக்கும் மேற்பட்ட பயனாளர்கள் இதில் பயனடைந்துள்ளனர். 15.97 லட்சம் கோடி கடன்கள் வழங்கப்பட்டு உள்ளது. இந்த முத்ரா திட்டத்தின் மூலம் பாரதத்திலேயே அதிகமாக தமிழகத்திற்கு ரூ. 63,150 கோடி கடன் வழங்கப்பட்டுள்ளது. இதனால் தமிழகத்தில் மட்டும் 1.20 கோடி பேர் பயன் அடைந்துள்ளனர் என மத்திய அரசின் செய்தி குறிப்பு தெரிவிக்கிறது.

# அமெரிக்காவிற்கு உதவிய ஆப்கானியர்கள் நிலை



விஜயபாரதம்

கடந்த பல வருடங்களாக அமெரிக்க துருப்புக்களுக்காக மொழிபெயர்பாளர், அலுவலக பணியாளர்களாக பணியாற்றிவந்த சுமார் 18 ஆயிரம் பேர் தற்போது தலிபான்களால் கொல்லப்படும் ஆபத்தில் உள்ளனர். சமீபத்தில் மொழிபெயர்பாளராக பணியோயாற்றிய சோஹைல் பார்டிஸ் தலிபான்களால் தலை துண்டிக்கப்பட்டு கொல்லப்பட்டார். உங்கள் நண்பர்கள் வெளியேறிவிட்டனர். இனி நாங்கள் உங்களையும் உங்கள் குடும்பத்தையும் கொல்வோம் என பலரும் கொலை மிரட்டல்களை எதிர்கொண்டுள்ளனர்.

இவர்கள் தற்போது அமெரிக்காவில் புகலிடம் கேட்டு விண்ணப்பித்துள்ளனர். அதற்காக, அமெரிக்க ராணுவம், (Operation Allies Refuge) ஆபரேஷன் நட்புப் புகலிடம் எனும் திட்டத்தை அறிவித்துள்ளது. இதற்காக அவர்களிடம் உண்மை கண்டறியும் 'பாலிகிராப்' சோதனை நடத்தப்படுகிறது. ஆனால் இதில் பலரும் தேர்வு பெறவில்லை. தகுதியடைவோர் வர்ஜீனியாவில் முதல்கட்டமாகத் தங்க வைக்கப்படுவார்கள் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த 2016ம் ஆண்டு முதல் 300 ஆப்கானிய மொழிபெயர்ப்பாளர்கள் தலிபான்களால் கொல்லப் பட்டுள்ளனர். அமெரிக்கர்களுடன் இணைந்து பணியாற்றியவர்களை கொல்லமாட்டோம் என அறிவித்த தலிபான்கள் அதனை தற்போது மீறி வருகின்றனர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

# ஒத்துழைக்க மறுக்கும் சீனா




விஜயபாரதம்

சீனாவில் உள்ள வுஹான் இன்ஸ்டிடியூட் ஆப் வைராலஜி நிறுவனத்திடமிருந்துதான் கொரோனா வைரஸ் கசிந்திருக்கலாம் என்பதற்கு பல சான்றுகள் வெளிவந்துகொண்டிருக்கும் நிலையில், அது குறித்து ஆராய்ச்சி செய்ய தனது ஆய்வகத்தில் யாரையும் அனுமதிக்க முடியாது என சீனா மீண்டும் திட்டவட்டமாக மறுத்துள்ளது. "இதுபோன்ற வைரஸ் தோற்றத்தைக் கண்டுபிடிக்கும் திட்டத்தை நாங்கள் ஏற்றுக்கொள்வது சாத்தியமில்லை" என்று சீனாவின் தேசிய சுகாதார ஆணையத்தின் துணை அமைச்சர் ஜெங் யிக்சின் தெரிவித்தார். உலக சுகாதார அமைப்பின் அதிகாரிகள் கடந்தமுறை சென்றபோதுகூட, தான் கண்டறிந்ததாக ஒரு அறிக்கையை சீனா அக்குழுவுக்கு அளித்ததே தவிர அவர்களை ஆய்வகத்தில் அனுமதிக்கவில்லை. முன்னதாக சமீபத்தில் நடந்த ஜி 7 உச்சி மாநாட்டில், வைரஸின் தோற்றத்தைக் கண்டறிய சர்வதேச விசாரணைக்கு சீனா ஒத்துழைக்க வேண்டும் என்று உறுப்பு நாடுகள் கோரின. அமெரிக்க அதிபர் ஜோ பிடன் தனது புலனாய்வு குழுவிடம் வைரஸின் தோற்றம் குறித்து விசாரித்து ஆகஸ்ட் மாதத்திற்குள் அறிக்கையை சமர்ப்பிக்குமாறு கேட்டுக் கொண்டுள்ளார்.

# அப்பாவிகளை கொல்லும் தலிபான்கள்



விஜயபாரதம்

ஆப்கானிஸ்தானில் உள்ள ஸ்பின் போல்டாக் பகுதியை கைப்பற்றிய தலிபான்கள் அங்கு நூற்றுக்கும் மேற்பட்ட பொதுமக்களை கொன்றுள்ளனர். இதனை ஆப்கன் உள்துறை அமைச்சகமும் உறுதிப்படுத்தியுள்ளது. பாகிஸ்தான் உத்தரவின்படியே இவை நடைபெறுகிறது, தலிபான் பயங்கரவாதிகள் பொதுமக்களின் வீடுகள், நாட்டின் உட்கட்டமைப்பு வசதிகளை அழிக்கின்றனர், அரசு அலுவலகங்களை கொள்ளையடிக்கின்றனர். ஸ்பின் போல்டாக் மைதானங்களில் அடக்கம் செய்ய வழியின்றி இறந்த உடல்கள் இன்னமும் பரவியுள்ளன என ஆப்கன் அரசு குற்றம் சாட்டியுள்ளது. இந்நிலையில், காந்தஹாரில் தலிபான் பயங்கரவாதிகளின் முன்னேற்றத்தை தடுக்க அமெரிக்க ராணுவம் சில தாக்குதல்களை நடத்தியுள்ளது. கடந்த முப்பது நாட்களில் ஏழு தாக்குதல்களை நடத்தியுள்ளது. பெரும்பாலான தக்குதல்கள் டிரோன் வழியே மேற்கொள்ளப்படுகின்றன என பென்டகன் செய்தித் தொடர்பாளர் ஜான் கிர்பி தெரிவித்துள்ளார்.


விஜயபாரதம் தேசிய வார இதழ்

சந்தா செலுத்த / புதுப்பிக்க

www.vijayabharatham.org

என்ற இணையதளம் அல்லது

044 - 26420870 என்ற தொலைபேசி

எண்ணில் தொடர்பு கொள்ளவும் .

93613 99006

# கார்கில் போர் வெற்றி தினம்

கார்கில் போர் வெற்றி தினம் இன்று கடைபிடிக்கப்படுகிறது. 22 ஆண்டுகளுக்கு முன் தனது உயிரை துச்சமென மதித்து பாகிஸ்தான் ராணுவ வீரர்களை எதிர்த்து வீரத்தோடு போரிட்டு வெற்றியை நாட்டுக்கு பரிசளித்தனர் நமது ராணுவ வீரர்கள். அந்த வீரர்களை நினைவு கூறும் வகையிலும் உயிரோடு இருக்கும் கார்கில் வீரர்களுக்கு மரியாதை செலுத்தும் வகையிலும் காஷ்மீரில் உள்ள டிராஸ் வார் மெமோரியல் கார்கில் போர் நினைவிடத்தில் இதனையொட்டி ஆண்டுதோறும் விழா நடைபெறும்.

1998 - 1999 குளிர்காலத்தில், பாகிஸ்தானிய ஆயுதப் படைகளின் சில பிரிவுகள் ரகசியமாக பரதத்தின் எல்லைக் கட்டுப்பாட்டுக் கோட்டின் வழியாக பாரதத்தில் ஊடுருவினர். பல பாகிஸ்தானிய ராணுவ வீரர்கள், முஜாஹிதீன்களின் போர்வையில் அனுப்பப்பட்டனர். இந்த ஊடுருவல் "ஆபரேஷன் பத்ர்" என்று அழைக்கப்பட்டது.

1999 மே 3ம் தேதி தொடங்கிய போர் ஜூலை 26ம் தேதி வரை நடந்தது. இரண்டு நாடுகளிலும் இந்த போர் காரணமாக நூற்றுக்கணக்கான நமது வீரர்கள் வீர மரணம் அடைந்தனர். கார்க்கில் போர் நடக்கும் போது உலக நாடுகள் பாகிஸ்தானை கடுமையாக விமர்சித்தன. அதேபோல் பாகிஸ்தான் உடன் பாரதத்தின் தரப்பில் பேச்சுவார்த்தை நடத்தப்பட்டது. ஆனால், எதற்கும் பாகிஸ்தான் செவி சாய்க்கவில்லை.

இந்த போரில் பாரதத்திற்கு 'ஆப்பரேஷன் விஜய்' முதல் வெற்றியை அளித்தது. அதன் பின்பு விமானப்படை உதவியுடன், டைகர் மலை பகுதியை ஜூலை மாதம் பாரதம் கைப்பற்றியது. இதனையடுத்த வரிசையாக பாகிஸ்தான் ஆக்கிரமிப்பு செய்திருந்த ரொலோலிங் மலை, பத்ரா டாப், ஸ்ரீநகர் லே தேசிய நெடுஞ்சாலை உள்ளிட்ட பகுதிகளைக் அடுத்தடுத்து கைப்பற்றியது பாரதத்தின் வீரமிகு ராணுவம்.

ஜூலை மாதம் இரண்டாம் வாரம் கார்கிலின் அனைத்து இடங்களையும் பாரதம் கைப்பற்றியது. இந்த கார்கில் வெற்றி பாகிஸ்தானிடம் மட்டும் பாரதத்தின் வலிமையை பறைசாற்றவில்லை. மொத்த உலகத்திற்கும் நமது வலிமையை எடுத்துரைத்தது. அன்று முதல் பாரதம் உலக அரங்கில் முக்கியமான தவிர்க்க முடியாத நாடாக மாறியது என்றால் அது மிகை அல்ல.

விஜயபாரதம்

